
இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 07-09-2025

# மண்டைச் சுரப்பை உலகு தொழும்!



**தொண்டு செய்து பழுத்த பழம்**
**தூய தாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
**மனக்குகையில் சிறுத்தை எழும் - என்று பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரைப் படம் பிடித்துக் காட்டினார் பாவேந்தர் பாரதிதாசன். மண்டைச் சுரப்பை உலகு தொழும் காட்சியைத் தான் இலண்டன் ஆக்ஸ்போர்டு காட்சிகள் நமக்குக் காட்டுகின்றன.**

பகுத்தறிவுப் பகலவன் - சுயமரியாதைச் சுடரொளி - தன்மான இயக்கத்தின் தனிப்பெரும் தலைவர் - தந்தை பெரியார் படத்தை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறந்து வைத்துள்ளார் திராவிட நாயகன் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் - தமிழ்நாட்டின் முதலமைச்சர் - திராவிட மாடல் ஆட்சி மூலமாக வென்று காட்டி வரும் வெற்றியாளர் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நூற்றாண்டு கண்ட இயக்கம், நூறு ஆண்டுகளாக காணாத காட்சி இது. உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், நம் பகுத்தறிவுப் பகலவனை அங்கீகரித்து அரவணைத்துக் கொள்ளும் காட்சி திராவிட இயக்க வரலாற்றில் முக்கியமான காட்சியாகும். செப்டம்பர் - 4 திராவிட இயக்க வரலாற்றில் கவனிக்கத் தக்க முக்கிய நாளாக மாறிவிட்டது. பொதுவாக, 'செப்டம்பர் மாதம் - திராவிட மாதம்' ஆகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் படத்திறப்பானது உலகக் கொண்டாட்டமாக ஆக்கிவிட்டது. திரைக்கலைஞர் தோட்டாதரணி வரைந்த ஓவியம் இது.

'பெரியார் உலகமயம் - உலகம் பெரியார்மயம்' என்பதை இலக்கு முழக்கமாக வைத்து முழங்கி வருகிறார் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். அந்த இலக்குக்கு மகுடம் கிடைத்திருக்கிறது இலண்டனில்.

பெரியாரின் பேரன், கொள்கை வாரிசு ஆகிய தகுதியோடு நிற்பதாகக் கம்பீரமாகச் சொன்னார் முதலமைச்சர்.

இங்கிலாந்தில் உள்ள செயிண்ட் அந்தோணி கல்லூரியும், பெல்லியோல் கல்லூரியும் இணைந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 4, 5 ஆகிய தேதிகளில் சுயமரியாதை இயக்கம் தொடர்பான இரண்டு நாள் மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள் பல்வேறு நாடுகளில் இருந்து இங்கு வந்து பங்கேற்று உரையாற்றி இருக்கிறார்கள். பேராசிரியர் முனைவர் ஆ.இரா.வெங்கடா சலபதியும், பேராசிரியர் கார்த்திக் ராம் மனோகரனும் இணைந்து உருவாக்கியுள்ள "The Cambridge Companion to Periyar" என்ற ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு ஆங்கில நூலை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இந்த சிறப்பான நூலை Cambridge University Press வெளியிட்டுள்ளது. அதேபோல், " The Dravidian Pathway' என்ற நூலையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

பெரியாரியம் என்பது உலகளாவிய வரையறைகளைக் கொண்டது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவாக விளக்கி இருக்கிறார்கள். சுயமரியாதை (self-respect), பகுத்தறிவு (rationality), சமதர்மம் (socialism), சமத்துவம் (equality), மானுடப்பற்று (Humanism), ரத்த பேதமில்லை (Non-discrimination based on blood), பால் பேதமில்லை (Non-discrimination based on Gender), சுய முன்னேற்றம் (self development), பெண்கள் முன்னேற்றம் (women empowerment), சமூக நீதி (social justice), மதச்சார்பற்ற அரசியல் (secular politics), அறிவியல் மனப்பான்மை (scientific temper) ஆகிவற்றை உள்ளடக்கியது தான் பெரியாரியம். எனவே தான் உலகத் தத்துவ ஞானிகள் வரிசையில் போற்றத்தக்கவராக பெரியார் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

'எனக்கு எந்தப் பற்றும் இல்லை. அறிவுப்பற்று, மானுடப் பற்று மட்டுமே உண்டு' என்று சொன்ன உலகத் தலைவர் தந்தை பெரியார்.

கன்பூசியஸ், சாக்ரடீஸ், வால்டேர், ரூசோ, அரிஸ்டாட்டில், இங்கர்சால், பிளேட்டோ, பினோசா, கமால்பாட்சா, மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மாவோ வரிசையில் வைக்கத்தக்க அறிவாசானாக பெரியார் இருக்கிறார். வள்ளுவரின், புத்தரின் தொடர்ச்சியாக இருக்கிறார். இவர்களை எல்லாம் தனது வாழ்நாளில் போற்றியவராகவும் பெரியார் இருந்தார்.

உலகம் முழுக்க பயணித்தார். உலகத் தத்துவங்களை இங்கு வந்து பரப்பினார். இங்கர்சால் எழுத்துகளை புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டார். மார்க்சும் எங்கெல்சும் எழுதிய 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை' ரஷ்யா செல்வதற்கு முன்பே தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். 'மதம்' குறித்த லெனின் நூலை வெளியிட்டார். பெர்னாட்ஷாவின் எழுத்துகளை வெளியிட்டார். கமால்பாட்சா மறைந்தபோது இரங்கல் அறிக்கை வெளியிட்டார். 'கமால்பாட்சா நாள்' கொண்டாடினார். பெண் விடுதலையின் வேதநூலாகப் போற்றப்படும் 'செகண்ட் செக்ஸ்' நூல் வெளிவருவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பெரியாரின் 'பெண் ஏன் அடிமையானாள்?' நூல் வெளியாகி விட்டது.

இன்றைக்குப் பிரபலமாக இருக்கும் செல்போன், கம்ப்யூட்டர், வாக்மேன், வெப்கேமரா, டெஸ்ட் டியூப் பேபி, உணவு கேப்சூல்கள், குடும்பக் கட்டுப்பாடு... அனைத்தைப் பற்றியும் 1940 ஆம் ஆண்டே பேசிய தொலை நோக்குச் சிந்தனையாளர் பெரியார்.

யாரும் பேசத் தயங்கிய கருத்துகளைப் பேசினார். காப்பி அடிக்க முடியாத போராட்டங்களை நடத்தினார். சட்டப் புத்தகத்தில் இல்லாத போராட்டங்களை நடத்தினார்.

'மனித மனத்தை பழுதுபார்க்க வேண்டும்' என்றார் சாக்ரடீஸ். அதைச் செய்தவர் தந்தை பெரியார். ஒடுக்கப்பட்ட மக்களிடம் பேசும் போது அவர்களை தலைநிமிர வைக்கப் பேசினார். ஒடுக்குவோர் மத்தியில் உரையாற்றும் போது அவர்களை தலைகுனிய வைக்கும் வகையில் பேசும் துணிச்சல் அவருக்கே இருந்தது.

'நோயை' அல்ல, 'நோய்க்கான காரணங்களை' ஒழிக்க நினைத்தவர் பெரியார் மட்டும் தான். தீண்டாமையைக் கண்டித்தவர்கள் கூட அதன் மூலத்தைக் கைவைக்க நினைக்கவில்லை. அதற்கான துணிச்சல் இல்லை. சனாதனிகள் கூட 'தீண்டாமையை' கண்டித்து பேசி வருகிறார்கள். 'ஒற்றுமை தான் சனாதனம்' என்று உளறிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் தீண்டாமைக்கான காரணங்களை, அடிப்படையைக் கேள்வி கேட்டவர் அவர் மட்டும் தான். சட்டத்தில், 'தீண்டாமை ஒழிப்பு' இருக்கிறது. அதனை 'ஜாதி ஒழிப்பாக' மாற்றச் சொன்னவர் அவர்.

அதனால் தான் இன்று ஆதிக்கவாதிகளால் பழிக்கப்படுகிறார். ஆதிக்கவாதிகளால் பழிக்கப்படுவர், அறிவுவாதிகளால் போற்றப்படுவார் என்பதன் அடையாளம் தான் பெரியார் உலகமயமாகி வருவது ஆகும்.

சமூகம் மேம்பட, சங்கிகள் கதற பெரியாரியம் உலகியம் ஆகட்டும்!

## என்றென்றும் தந்தை பெரியார் வழியில்

# திராவிட மாடல் அரசு தொடரும்! சாதிக்கும்!

## இலண்டனில் 2 நூல்கள் வெளியீட்டு விழா குறித்து

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் உறுதி!








**இலண்டன், செப்.7–**

**இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக விழாவில் இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா குறித்து தமது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'உறுதியோடு சொல்கிறேன், என்றென்றும் பெரியார் வழியில் திராவிட மாடல் அரசு தொடரும் சாதிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.**

இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கில் இரண்டு நூல்கள் வெளியிட்டது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஆக்ஸ்ஃபோர்டில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டுக் கருத்தரங்கு!

தந்தை பெரியார் நிகழ்த்திக் காட்டியதெல்லாம் ஆயுதமேந்தாத இரத்தம் சிந்தாத புரட்சிகள்!

இந்நிகழ்வின்போது, பெரியாரின் சிந்தனைகள் போராட்டங்களை உலகம் முழுதும் கொண்டுசெல்லும் வகையில், வரலாற்றாய்வாளர் ஆ.இரா.வெங்கடாசலபதி மற்றும் முனைவர் கார்த்திக் ராம் மனோகரன் தொகுத்துள்ள The Cambridge Companion To Periyar நூலையும்;

பெரியார் தொடங்கிய சமூக இயக்கத்தில் இருந்து வெகுசன மக்கள் இயக்கமாகக் கிளைத்த தி.மு.கழகம் ஆட்சியைப் பிடித்து, தமிழ்நாட்டின் போக்கையே மாற்றியமைத்த புரட்சி வரலாற்றை, இளம் ஆய்வாளரான முனைவர் விக்னேஷ் கார்த்திக் அவர்கள் ஆய்வுநடையில் வெளிப்படுத்தியுள்ள The Dravidian Pathway நூலையும் வெளியிட்டேன்.

ஒரு சீர்திருத்தவாதி, தான் பரப்புரை செய்த கருத்துகள் எல்லாம் அரசாணைகளாக மாறிச் செயல்வடிவம் பெறுவதைக் கண்ட பெருமை தந்தை பெரியாருக்கே உரியது. அவற்றைச் செயல்படுத்திய பெருமை பேரறிஞர் அண்ணாவுக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்கும் நமது திராவிட மாடல் அரசுக்கும் உரியது.

உறுதியோடு சொல்கிறேன், என்றென்றும் பெரியாரின் வழியில், நமது திராவிட மாடல் அரசு தொடரும்! சாதிக்கும்!

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உடல் உறுப்பு தானம் செய்த

# 500-வது கொடையாளருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – ஆவடி சா.மு.நாசர் மலர்வளையம் வைத்து மரியாதை!

திருவள்ளூர், செப். 7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் ஆகியோர் 04.09.2025 அன்று திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், மோரை, புதிய கண்ணியம்மன் நகர் பகுதியைச் சேர்ந்த டி.செல்லப்பன் (வயது 53) என்பவர் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மூளைச்சாவடைந்து உடல் உறுப்பு தானம் செய்த 500-வது கொடையாளருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக நேரில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழ்நாட்டில் மூளைச் சாவு அடைந்தவர்களிடத்திலிருந்து உடல் உறுப்புகளை தானமாக பெற்று, அவற்றின் மூலம் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. அத்தகைய உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 செப்டம்பர் திங்கள் 23 ஒரு சிறப்பு அறிவிப்பு வெளியிட்டார். அதன்படி மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்பவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். முதல் கொடையாளியாக 2023 தேனி மாவட்டம் சின்னமனூர் முதல் அரசு மரியாதை செய்து இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து தமிழ்நாட்டில் ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாக இந்த மூளைச் சாவு அடைந்தவர்களிடமிருந்து உடல் உறுப்புகள் தனமாக தருவது என்பது உயர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் பலர் நூற்றுக் கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகிறது.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டிற்கு இந்திய அளவில் முதல் மாநிலம் என்கின்ற வகையில் இந்த உடல் உறுப்பு தானத்திற்கு சிறந்த மாநிலத்திற்கான விருதும் கிடைக்கப் பெற்று வருகிறது இன்றைக்கு ஆவடி பகுதியைச் சேர்ந்த மாதாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மோரை பகுதியிலுள்ள செல்லப்பன் அவர்கள் (வயது 53) மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு சென்னை கே.எம்.சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வந்தார் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்து உள்ளார், நீரழிவு மற்றும் உயர் ரத்த நோய்களினால் பாதிக்கப்பட்டவர் இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும் அவருடைய குடும்பத்தார் அவருடைய உடல் உறுப்புகளை தானமாக தந்திருக்கிறார்கள். செல்லப்பன் அவர்களுடைய திருவுடலுக்கு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சேர்ந்த ஆணையத்தின் அதிகாரிகள், உயர் மருத்துவர்கள், அவருடைய உடலுக்கு அரசு மரியாதை செலுத்தி இருக்கிறோம். இந்த திட்டத்தை பொறுத்தவரை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த திட்டத்தை 2008 ஆம் ஆண்டு தொடங்கினார்கள். தொடர்ந்து இன்றைக்கு ஏராளமான பேர் இதன் மூலம் பயன்பெற்று வருகிறார்கள் இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 2,230 பேர் உடல் உறுப்பு தானம் செய்திருக்கிறார்கள் 2230 என்பது 2008 தொடங்கி இந்த ஆண்டு வரை அரசு மரியாதை என்று தொடங்கியதற்கு பிறகு நான்கில் ஒரு பகுதி பேர் இந்த இரண்டு ஆண்டுகளிலேயே உடல் உறுப்பு தானம் செய்து பலருக்கு வாழ்வு அளித்துள்ளனர். மரியாதைக்குரிய செல்லப்பன் அவர்கள் உடலுக்கு இன்றைக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

## கப்பலோட்டிய தமிழர்

# வ.உ.சிதம்பரனாரின் பெருவாழ்வை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



**சென்னை, செப். 7-**

**வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் விடுத்த வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் பெருவாழ்வை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

உண்மையான சுதேசி உணர்வோடு, செக்கிழுத்துச் செங்குருதி சிந்தி, தியாக வாழ்வுக்கோர் எடுத்துக்காட்டாக நாட்டுப்பற்றுக்கு இலக்கணமாக நம் நெஞ்சங்களில் வாழும் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் பெருவாழ்வை, அவரது 154ஆவது பிறந்தநாளில் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## காணொலிக் காட்சி வாயிலாக – இன்று

# மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அண்மையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், அதனை அடுத்து நடைபெற்ற மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்திலும் அறிவுறுத்தியபடி, வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நாம் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கின் அடிப்படையில், உடனடியாக ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள BLO, BLA2 மற்றும் BLC விவரங்களை சரிபார்க்கும் பணி மாவட்டக் கழகச் செயலாளர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விவரங்கள் கள அளவில் சரிபார்க்கப்பட்டு தலைமைக் கழகத்திற்கு வரும் 10/09/25 அன்று ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒட்டி மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆற்ற வேண்டியுள்ள பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று (07/09/2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.30 மணியளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதிப் பார்வையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு**
மண்டலப் பொறுப்பாளர்